உ

கடவுள் துணை.

# செந்தமிழ்

தொகுதி-சரு.] சர்வசித்துஞு மார்கழிமீ [பகுதி-உ.

Vol. 45. December 1947—January 1948. No. 2.

# திருவள்ளுவர்காலமும் திரு. வையாபுரிப் பிள்ளையவர்கள் கொள்கையும்

உயர்திரு. ச. சோமசுந்தரபாரதியார் M.A. B. L. அவர்கள் எழுதியது.

சென்னைப் பல்கலைநிலையத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவராய் நிலவிய ராவ்ஸாஹிப். திரு. S. வையாபுரிப்பிள்ளையவர்கள், வள்ளுவர்குறள் கி. பி. ஏழாம்நூற்றாண்டின் தொடக்கத்தில் இயற்றப்பட்டதென ஒரு கட்டுரை வெளியிட்டிருப்பதாக ஒரு நண்பர் என்னிடம் கூறினர். அறங்கூறும் குறட்கோவை பழைய தமிழ்நூலென்பது என்கருத்து. எனினும் உண்மை வேறாகவிளங்குமெனின் அதை ஏற்கவிரும்புவதும் என் இயல்பு. ஆதலினால், பிள்ளையவர்கள் புத்துரையை நன்றாய்ப் படித்துப்பார்த்தேன். அடிப்பட்டவழக்கை மாற்றுவதற்கோ பிள்ளையவர்கள்கொள்கையை ஏற்பதற்கோ இடமில்லையென்று கண்டேன். என்முடிவை முன்சொன்ன நண்பருக்கும் அறிவித்தேன். அவரோடு பிறர்சிலரும் என்கருத்தை வெளியிடுதல்வேண்டும் என விரும்பியதால் இங்கு இதனை எழுதுகின்றேன்.

செந்தமிழ் 43-ஆம் தொகுதியின் முதற்பகுதியில் வள்ளுவர் குறள் மிகப் பிற்காலநூலெனப் பிள்ளையவர்கள் வானொலியிற்பேசிய உரை வெளியிடப்பட்டுளது. அவ்வுரையில் ஒருபாதி குறள் தொல்காப்பியர்நூலுக்குப் பிந்தியும் நாலடிநானூற்றுக்கு முந்தியும் இயற்றப்பட்டதெனக் காட்டப் பல காரணம் கூறுகிறது. மற்றொரு பாதி தமிழரிடை "ஒழுக்கநிலையை மிகப்பரப்பிய சமணர்முயற்சியிற்கனிந்து" வடமொழிநூல்களை வடித்தெடுத்துத் தேவாரகாலத்தில் திரட்டப்பட்டது திருக்குறள் என்று காட்ட அரும்பாடுபடுகிறது.

இவ்விரண்டில் முன்னது முழுதும் வீண்முயற்சி; தொல்காப்பியர் வள்ளுவர்க்கு முந்தியவர் என்பதில் ஐயமுறும் தமிழறிஞர் யாருமில்லை. இறவாமல் எஞ்சிநிற்கும் தமிழ்நூற்கெல்லாம் தொல்காப்பியர்நூல் காலத்தால் முற்பட்டதென்பது, தமிழன்றி வடமொழி வல்லாரும் மறுக்ககிலா உண்மையாகும்.

தொகைநூல்களனைத்துக்கும் மிகப்பின்னே நெடியதொரு நூற்றாண்டுமுடிந்ததன்மேல் தொல்காப்பியர்நூல் பிறந்ததென்று பிள்ளையவர்கள் கூசாமல் பேசுகின்றார்கள். அது பொருந்தாமையும் தொல்காப்பியநூலின் பழமையும் விளங்க யான் ஆங்கிலத்திலும் தமிழிலும் முன்பே எழுதி வெளியிட்ட கட்டுரைகளிற் கண்டு தெளிக. இப்போது தொல்காப்பியருக்குப் பிற்பட்டவர் வள்ளுவர் என்பது ஊகிக்கவேண்டாத உண்மையென்று உடன்படுவோம்.

ஆனால், தொல்காப்பியர்காலம் எது? அவருக்கு எவ்வளவு காலத்துக்குப்பிறகு குறள்பிறந்தது? இவ்வினாக்களுக்குத் தக்க ஆதரவோடு விடைதராமல் பிள்ளையவர்கள் தம்கூற்றை ஊகவாகனமேற்றி மாகவிசும்பில் உலவச்செய்கிறார்கள். அவ்வூகங்கள் வருமாறு:—

தொகைநூல்கள் கி. பி. இரண்டாநூற்றாண்டுமுடிதற்குமுன் தோன்றின என்னும் பழையமுடிபை உடன்பட்டுக்கொண்டே

கி.பி. மூன்று நூற்றுண்டுகழிந்தபிறகே தொல்காப்பியர் நூல் எழுந்ததென்று ஏது யாதுமில்லாமல் துணிகிறார்கள். அதன்பிறகு 'கி. பி. ஆறுநூறில் குறள் இயற்றப்பட்டிருத்தல்வேண்டும்' என்றும் ஊகிக்க முனைகிறார்கள்.

இனி, குறள் நாலடியார்க்கு முற்பட்டதென்பதையும் ஒப்புக்கொள்வோம். ஆனால், "நாலடியாரின்காலம் கி. பி. ஏழா நூற்றுண்டின் இடைப்பாதி"; அதாவது கி. பி. 650. குறள் அதற்கு அரை நூற்றுண்டுக்கு முற்பட்டது. ஆதலினால் 'குறட்காலம் கி.பி. 600' எனத் துணிகிறார்கள். அத்துணிவுக்கு அவர்கள் கூறும் காரணம் நாலடிப்பாட்டு இரண்டில் முத்தரையர் சுட்டப்படுவதே. "நாலடியாரில் குறிக்கப்பட்ட முத்தரையன் பெரும்பிடுகுமுத்தரையனே எனக்கொள்ளலாம். இவன்காலம் கி.பி. ஏழா நூற்றுண்டின் இடைப்பாதி. ஆகவே நாலடியாரும் கி. பி. 650ல் இயற்றப்பட்டிருக்க வேண்டும்" என்கிறார்கள். இத்துணிவுக்குப் பிள்ளையவர்கள் தம் ஊகமன்றிப் பிறசான்றெதுவும் காட்டவில்லை.

நாலடிப் பாட்டிரண்டும் ஒருமையும் பெயரும் குறியாமல் ஒரு குடிப் பலர்கொடைப்பெருமையைப் பேசுகின்றன.

> "பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்
> கருனைச்சோ றார்வர் கயவர்" (200) எனவும்,
>
> "பெருமுத் தரையரே செல்வரைச் சென்றிரவாதார்" (296)

எனவும் அப்பாட்டுக்கள் கூறுகின்றன.

முத்தரையர் என்பது பல்லவர், சோழர், பாண்டியர் என்பது போல ஒருகுடிப் பலருக்குப் பொதுப்பெயர். மேற்குறித்த பாடல்களில் முத்தரையருள் தனி ஒருவனைச்சுட்டும் இயற்பெயரோ சிறப்பியல்போ எதுவுமில்லை. பழந்தமிழ்ப்பாட்டில் ஒருவனைச்சுட்டும் மரியாதைப்பன்மைவழக்கில்லை; மாபும் இல்லை. ஆகவே நாலடியாரின்காலத்தை வரையறுக்க வழியில்லை; அதைக்கொண்டு திருக்குறளின் கீழெல்லைதெளிவதும் எளிதன்று.

இவ்வாறு பிறநூல்வரலாறு குறள் பிற்பட்டதென்பதை நிறுவப் போதாமையுணர்ந்து வேறுசில கூறுகிறார்கள். அவற்றை யும் ஆராய்வோம்.

பிற்காலத்திற் கீழ்க்கணக்குவரிசையில் வள்ளுவர்குறளும் ஒன்றாக எண்ணப்படுகிறது. "கீழ்க்கணக்குநூல்கள் மிகமிகப் பிற்பட்டகாலத்துத்தோன்றியன என்பது உறுதியாகும். ஆதலால், சங்க இலக்கியகாலத்திற்கும் கீழ்க்கணக்குநூல்களின்காலத்துக் கும் இடையே 3 அல்லது 4 நூற்றாண்டுகள் சென்றிருத்தல் வேண்டுமென ஒருவாறு ஊகிக்கலாம்" என்பது பிள்ளையவர்கள் வாதம்.

பழமொழிபோல்வன சில பிற்காலத்தனவாக இருக்கலாம். அதனால் கீழ்க்கணக்கெனப் பிற்காலத்தார் தொகுத்தெண்ணும் பதினெட்டும் கி.பி. 600க்குப் பிற்பட்டவை என ஊகிப்பது எப்படி? அவையனைத்தும் ஒருகாலத்தவை என்று யாரும் என்றும் கூறிய தில்லையே? அதற்குமாறாக வள்ளுவர் கடைச்சங்ககாலத்த வர் என்பதும் கீழ்க்கணக்குநூல்களுள் எண்ணப்படும் களவழி பாடிய பொய்கையாரும் இன்னாநாற்பதியற்றிய கபிலரும் அச்சங் கப்புலவர் என்பதும் தொன்றுதொட்டுப் பழம்புலவர்பலரும், பழைய உரைகாரரும், கம்பருக்குமுந்திய சயங்கொண்டார் கூத்தர் போல்பவரும் கூறியுள்ள செய்தியாகும். அவரனைவரையும் மறுத் துப் பிற்காலத்தார் கீழ்க்கணக்குவரிசையிற் குறளையும் கூட்டி யெண்ணியதனால்மட்டும் அதைக் கி. பி. 600ல் இயற்றப்பட்ட தெனத் துணியமுடியுமா? கீழ்க்கணக்குகளெல்லாம் ஒரு காலத் தன அல்ல என்பதும், தொடர்பின்றிப் பலநூற்றாண்டுகளுக்கு முன் பின்னாகத் தோன்றிய அவற்றிடைச்சில பொதுவியலுண்மையால் அவற்றைக் கீழ்க்கணக்குகள் எனத் தொகுத்துக்கூறியது மிகப் பிற் காலத்தில் என்பதும் யாவருக்கும் உடன்பாடு. எனவே குறள் கீழ்க்கணக்குநூல்களுக்கெல்லாம் முந்தியதென்பது ஒருதலையாவ தன்றியும், கி. பி. 200க்கு முந்தியவென்று பிள்ளையவர்கள்கூறும் தொகைநூல்களுக்கும் குறள்முந்தியதென்பது, அவற்றில் குறள் எடுத்தாளப்படுதலால் ஒருதலையாகத் தெளியப்படும்.

"தொகைநூல்களிற் பயிலாதனவும் தொல்காப்பியர் சொல்லாதனவுமாகிய புதிய அன், கள், மல், ஏல், மே எனும் விகுதிகளும் அல்லால், ஆனால், போழ்து எனும் சொல்லுருவங்களும் குறளிற் புகுந்துள்ளன. ஆகையால் குறள் கி. பி. 200க்கு முந்திய தொகை நூல்களுக்கும் கி. பி. 300க்குப்பிந்திய தொல்காப்பியர் நூலுக்கும் பலநூற்றாண்டுகளுக்கு அதாவது கி. பி. 600க்குப் பின் எழுதப் பட்டிருக்கவேண்டும்" என்பது பிள்ளையவர்கள்கூற்று. இது வாதப் போலி.

பிள்ளையவர்கள் எடுத்துக்காட்டும் ஈறுகளும் சொல்லுருவங்களும் புதியவையல்ல; அவர்களே கி. பி. 200க்கு முந்தியதொன்மை தரும் தொகைநூல்களில் வழங்கியுள்ளவை.

அன்றியும், முதலில் ஒருநூலில் விதந்துசொல்லாத எல்லாம் அந்நூற்காலத்து இல்லாதவையென்பது ஏதவாதம்.

தொல்காப்பியர் வேற்றுமையுருபுகளையெண்ணுமிடத்து மூன்றாவதற்கு ஆனுருபு உண்டென்று கூறவில்லை. ஆயினும், தொல்காப்பியருக்கும் முந்தியவாகப் பிள்ளையவர்கள் பேசும் தொகைநூல்களிலும் தொல்காப்பியர் நூலிலுமே அவ்வுருபுண்மை தெரிகிறது.

> "கு ஐ ஆன் என வரூஉம் இறுதி
> அவ்வொடு சிவணும் செய்யு ளுள்ளே"
>
> (தொல். சொல். வேற்றுமைமயங்கியல். உ௫)

என்பது காண்க.

அவர் நூலிலே குறிப்புவினைகளைக்கூறுங்கால் 'உண்டு' என்பது உரைக்கப்படவில்லை எனினும், 'இடனுமாருண்டே' (தொல். பொருள் ௧0உ) என்று அவரே கூறக் காண்கிறோம்.

மேலும், எதிர்மறையேவல்விகுதியெதுவுமே தொல்காப்பியர் கூறவில்லை. எனினும், "அழியல் அஞ்சல்" (தொல். பொருள். 146. வரி. 22) என்று அவரே வழங்கக்காண்பதன்றியும், 'நிலம்பெயரினும் நின்சொற்பெயரல்' (3-14) எனப் புறநானூற்றிலும் பயிலக் காண்கிறோம்.

இதனால் விதந்துகூறுதுவிடப்பட்டதொன்றை இல்லையென்பது தொல்லைதருமென்பது வெளியாகும்.

இனிப் பிள்ளையவர்கள் முந்துநூல்களில் இல்லையென்று கூறுவன அனைத்தும் மிகப்பழையனவாய் அவர்கள் பேசுகிற நூல்களிலே பயின்றுவருதலும் காட்டலாகும்.

அன்விகுதி தன்மையொருமையில்வருதல், 'உரைத்தனன் யான்' (புறம்-136. வரி. 22), 'யானும்...வந்தனன்' (புறம்-154. வரி. 6, 7), 'ஈங்கே தலைப்படுவன்' (கலி. 64. வரி. 24) என்பவற்றால் அறியலாம்.

மேலும் பிள்ளையவர்கள், "தொல்காப்பியர்காலத்துக் 'கள்' என்ற பன்மைவிகுதி அஃறிணைக்குமட்டும் உரியதாயிருந்தது. உயர்திணைப்பெயர்களுக்கு இவ்விகுதி வருதல் இல்லை. .......இந்த வழக்கு தொல்காப்பியர்காலத்துக்குப்பின் தோன்றியதாகும்" என்று குறித்து, திருக்குறளில் 'பூரியர்களாழுமளறு' (919) 'மறந்தார்கொல் மற்றையவர்கள் தவம்' (263) எனக் கள்விகுதி உயர்திணைப்பெயர்களோடிணைத்து வழங்கப்பட்டிருத்தலால் திருக்குறள் மிகப் பிற்பட்டகாலத்தது என்று துணிகிறார்கள்.

அவ்வாறாயின், 'கேளிர்கள் நெஞ்சழுங்க' (149. வரி 8) என்று கலித்தொகையுள் வருதல்கொண்டு அதுவும் அவர்கள் கருத்துக்கு மாறாகப் பிற்பட்டதாகுமே.

இவர்கள் புதுவழக்கென்றும் பிற்பட்டவழக்கென்றும் காட்டியவற்றுள், மல் விகுதி, "துறந்து தொடிநெகிழ்த்தான்போகிய கானம், இறந்தெரி நையாமல் பாஅய்முழங்கி, வறந்தெதன்னை செய்திபோ வானம்" (145 வரி. 18-20) எனவும், 'தத்தம் கொழுநரைப் போகாமல் காத்து' (109. வரி. 24-25) எனவும் கலித்தொகையினும், ஏல்விகுதி, 'மருந்து பிறிதியாதும் இல்லேல்' (24. வரி. 21) எனக் கலித்தொகையினும் பயின்றுள்ளன. இவைபோல்வன பலவும் பழந்தமிழ்நூல்களுள்வருவதைப் பிள்ளையவர்கள் மறந்தார்கள் போலும்.

இனிப் பிள்ளையவர்கள் காட்டும் ஆனால், அல்லால், போழ்து எனும் புதிய சொற்களையும் ஆராய்வோம்.

ஆனால் என்பது ஆல் ஈற்றுச்சொல். ஆ முதனிலை, ன் சாரியை, ஆல் வினையெச்சஈறு. அதை ஆ + இன் + ஆல் என்பதன் திரிபாக்கி, இன் மறைந்து ஆனால் எனக் குறைந்ததாகப் பிள்ளையவர்கள் கொள்வது ஏனோ? இன் கெட்டால் ஆ + ஆல் என்பன மிஞ்சும். அவை கூடின் ஆவால் என்றன்றோவரும்? ஆனால் என்பதில் இடைனகரம் உடம்படுமெய்யாகாதே? அன்றியும் விலக்கிய ஆல்விகுதி உண்டென்பது உறுதிதானே? 'ஆயர் எமரானால்' (108. வரி. 9) என இது கலித்தொகையினும் பயின்றுள்ளதே. அங்ஙனமிருப்பவும் அது மிகமிகப் பிற்பட்டவழக்கெனப் பிள்ளையவர்கள் எளிதில் அறிந்தவெவ்வாறு?

'அல்லால்' என்பது, கலித்தொகையில், 'வருந்தநோய்செய் திறப்பின் அல்லால்' (109. வரி. 21) என்புழிக் காணப்படுகின்றதே. அதைப் பிற்காலவழக்கென்ப தெப்படி?

அன்றியும், " 'போழ்து' எனக் குறளில் வருவது 'பொழுது' என்பதன் பிற்பட்டவடிவம்; அதனால், குறள் கி. பி. 600ல் இயற்றப்பட்டிருத்தல்வேண்டும்" என்கிறார்கள். இது ஊகத்தின்மேல் ஊகக் குழிப்பெருக்கல்.

பழந்தமிழ்நூல்களிலே சொற்களின் உயிரளவும் உருவும் திரிதல் பெருவழக்காய்ப்பயிலக்காண்பாம். மூழ்கல், வீழ்தல், மூப்பு என நெடில்முதலானவைபோலவே முழுகல், விழுதல், முதுமை என்று முதலிற் குறில்பெறும் வடிவுடைச்சொற்களும் வருகின்றன. முழுகினன், விழுந்தது, முதியோர் என்பன நாமறிந்த பிற்காலச் செய்யுள்களிலும் பயிலக்காண்போம்.

அன்றியும், பிள்ளையவர்கள் பிற்காலவழக்காகக் குறித்த "போழ்து" என்பது 'எல்லிற்றுப்போழ்தாயின்' (117. வரி. 13) எனக் கலித்தொகையுள்ளும் பயிலக்காண்கின்றோமே. அவ்வழக்குக்கொண்டு கலியும் பிற்காலநூலாதல்கூடுமே?

திருக்குறளிற் பொழுது போழ்து என்னும் இருசொற்களும் பயின்றுள்ளன. அகவலும் கலியுமான தொகைநூலிற் சொல்லுரு வில் உயிரளவுக்கு நியதியில்லை. வெண்குறளிற் சீர்தளையின் வரையறையாற் சொல்லில்வரும் உயிரளவு இடம்நோக்கி மாற்றமடையும். பிற சான்றுகளாற் குறில் முன்வந்த சொல்லுருவங்களே பழமையுடையன என நிறுவப்பட்டாலன்றி இவ்வாதம் ஏற்கொணாது.

நெடில் முதனிலைகளே விகுதி முதலிய உறுப்புக்களையேற்கக் குறுகுதல் தமிழியல்பன்றோ! வா தா சா காண் என்னும் முதனிலைகள் வந்தான், தந்தான், செத்தான், கண்டான் என முன்னின்ற நெடில் குறுகிநிற்கின்றன. ஆதலால் 'பொழுது' எனக் குறில் முன்னின்ற சொல்லுருவே பழமையுடையதெனல் கூடாது. எனவே பொழுது என்பதன் பிற்பட்ட வடிவமே போழ்து எனத் துணிய ஆதாரவேதும் இல்லை. அச்சொல்லாட்சியாற் குறட்காலம் கி.பி. 600 என்று ஏற்படாது.

இனிப் பிள்ளையவர்கள் தமிழ்நூற்சான்றுகள் குறளுக்குத் தொன்மையை விலக்காவாதலால் தம் முடிபைப் பிறிதொரு வகைச்சான்றுகளால் உறுதிப்படுத்தநினைந்து "வடமொழிச் சொற்களையேயன்றி வடமொழிக்கருத்துக்களையும் வள்ளுவர் எடுத்தாண்டுள்ளார். அதனால், குறள் கி. பி. ஆறும்நூற்றாண்டுக் குப்பிந்தியது என்று கூறுகிறார்கள்.

இக்கூற்றை ஆராயுமுன் நாம் ஏமாறுமற் கருத்தில் இருத்த வேண்டிய ஒன்றிரண்டுசெய்திகளைச் சிந்திக்கவேண்டும்.

(1) மிகப்பழைய சங்ககாலத்திலேயே வடசொற்களைத் தமிழ்ச்சான்றோர் விலக்காது ஏற்றுக்கொண்டுள்ளனர்.

> "வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
> எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"

என்று இடைச்சங்கத் தமிழ்நூல் கூறுகிறது. அது தென்றமிழ் நாட்டைத் திரைகொள்ளுமுன்னே வான்மீகர் அறிந்த கபாடத்தில்

பாணினிநூலுக்கு முந்திய ஐந்திரநிறைந்த தொல்காப்பியர் கூறியது. கி.பி. இரண்டாம்நூற்றூண்டுக்குமுந்திய சங்கத்தொகைநூல்களில் வடசொல் வழங்காதது எதுவுமில்லை, சில வடசொற்கள் குறளில் வருவதால் அதைக் கி. பி. ஆறும்நூற்றூண்டுக்குத்தள்ளிவிடமுடியாது.

(2) குறட்கருத்துக்கள் சில வடமொழிநூல்களிற் காணப்படுதலாற் குறள் அவற்றுக்குப் பிற்பட்டதாய்விடாது. பல குறட்கருத்துக்கள் வடநூலொன்றில் மாறுதலின்றி இடம்பெற்றூலுமே எந்தநூல் முந்தியது என்பதை நன்றூய்ச் சான்றுகளாலே ஆய்ந்து முடிவுகட்டுவதைவிட்டுக் குறளே பிந்தியதென்று கொள்வது குதர்க்கமாகும்.

இவ்வுண்மைகளை மறவாமல் நினைவிற்கொண்டு பிள்ளைபவர்கள் கூறுவனவற்றை ஆராய்வோம்

(1) 'பூசனை, ஆசாரம் என்பன முதலிய ஒருசில தனிமொழிகளும், 'ஆதிபகவன்' என்ற இருமொழித்தொடரும் குறளில் வந்துள்ளமை அனைவரும் அறிவர்' என்கிறூர்கள். அதனுல் குறளின் காலம் கி. பி. ஆறும்நூற்றூண்டாவது எப்படி ?

(2) இனி, "வடமொழிச்சொற்களையேயன்றி வடமொழிக் கருத்துக்களையும் வள்ளுவர் எடுத்தாண்டுள்ளார்" என்று கூறி, அதற்கு எடுத்துக்காட்டாகக் காமந்தகம், அர்த்தசாஸ்திரம், காமசூத்திரம் என்பவற்றில் ஒருசில கூற்றுக்களுக்கும் சிற்சில குறளுக்கும் ஏகதேசஒற்றுமையுண்டென்று காட்டுகிறூர்கள்.

கருத்துக்கள் ஒருமொழிக்கும் சொந்தமில்லை; பலமொழியாளருக்கும் பொதுவுடைமை. ஒரு கருத்து இருமொழிநூல்களில்வருவது இயல்பு. ஒருநாட் டிருமொழிநூல்களில் ஒத்தகருத்துவருவது அருமையன்று. பிறநாட்டுப் பலமொழிநூல்களிலும் ஒத்த ஒருகருத்து வருவதைக் காணலாமே. அதுகொண்டு அவற்றிடைத் தொடர்புடைமை ஊகிக்க இயலாதே. இனி, அதற்குமேல் தமிழ்க் குறளின்காலத்தை ஒத்த கருத்துள்ள வடநூற்குப் பிறகென்று கருதுதற்கு இடனுண்டோ ?

முதலில் அந்நூல்களின்காலத்தை வரலாற்றுமுறையில் ஆன்ற சான்றுகொண்டு அளந்து அறுதியிடல்வேண்டும். பிறகு அவற்றிடை இன்றியமையாத தொடர்பியைபு துணியவேண்டும். இவையெதுவும் இல்லாமல் வடமொழிநூல்களில் வருவதெல்லாம் தமிழ்ப்பனுவல்களுக்கு மூலமுதல் என்பது விதண்டையாகும்.

பிள்ளையவர்களே தாம்கூறும் வடநூல்களின் காலம் கி. பி. 4, 5ஆம் நூற்றாண்டுகள் என்கிறார்கள். குறள் அவற்றுக்குப் பிற்கால நூலென்று பிற சான்றுகாட்டி அறுதியிட்டால் அதன்பிறகு அவற்றின் தொடர்பைச் சிந்திக்கலாம். ஒரு குறளுக்கு வடநூலொன்றில் ஓரோவிடத்து ஒருபுடை யொப்புமைகாணுவதைக்கொண்டு குறளை அவ்வடநூற்குப் பிந்திக் கி. பி. 600ல் பிறந்தது எனத் துணிகிறார்கள். அதற்குப் படிப்பவரின் உடன்பாடும் உறுதியென நினைக்கிறார்கள்.

இலக்கணக்கொத்துடையாருங்கூடத் தொல்காப்பியர்க்கும் திருவள்ளுவர்க்கும் தொன்மையை மறுத்துத் தொகைநூல்களுக்கும் பிற்கால வடநூல்களுக்கும் அவரைப் பிற்பட்டவராக்கத் துணியவில்லை. வடமொழிப்பேராசிரியர் டாக்டர் சுப்பிரமணியசாஸ்திரியவர்களும் தொல்காப்பியர்நூல் இறவாத சங்கச்செய்யுள்களுக்கு முந்தியதென்று நூற்சான்றுகூறி நிறுவுகிறார்கள். அதையே சான்று எதுவும் காணுமல் கி. பி. 300க்குப் பிற்படுத்தத் துணியும் பிள்ளையவர்கள் வள்ளுவரைக் கி. பி. ஆரும்நூற்றாண்டுக்குத் தள்ளுவதில் வியப்பென்னே?

# திருப்பந்தணைநல்லூர்ச் சிவன்கோயிற் கல்வெட்டுக்களின் சுருக்கங்கள்

[திரு. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள், திருவையாறு.]

இத்திருக்கோயிலிற் பிற்காலத்துச் சோழமன்னர்கள்காலத்தவை ஆறும், விசயநகரவேந்தரான அச்சுததேவமகாராயர்காலத்தவை இரண்டும், எல்லன் காலிங்கனைப்பற்றியது ஒன்றும் ஆக ஒன்பதுகல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவைகளன்றி இக் கோயிலைப்பற்றி இவ்வூர் ஆதிகேசவப்பெருமாள்கோயிலில் உள்ள கோனேரி தேவமகாராசர் கல்வெட்டொன்றிலும் குறிப்புக்கள் உண்டு. இக்கோயிற் கல்வெட்டுக்களையெல்லாம் கல்வெட்டுத் துறையாளர் படியெடுத்துச்சென்று அவைகளின் குறிப்புக்களை 1931, 1932-ஆம் ஆண்டுகளில் வெளியிட்டுள்ளனர் [See The Annual reports on South Indian Epigraphy for the year ending March 1931 and 1932]. கோயிற் கண்காணிப்பாளரின் விருப்பப்படி, யான் இக்கோயிற்கல்வெட்டுக்களையெல்லாம் படித்து எழுதினேன். உதிர்ந்துள்ள கல்வெட்டுக்களிற் சிற்சிலவற்றிற்குக் கல்வெட்டுத்துறையாளரின் ஆண்டு அறிக்கைகள் பயன்பட்டன. இக்கல்வெட்டுக்களின் சுருக்கங்கள் ஆராய்ச்சியாளர்க்குப் பயன்படுமென்று எண்ணிச் செந்தமிழில் வெளியிடலானேன்.

அளிக்கப்பெற்ற நிபந்தங்கள்.

I. மகாமண்டபத்தின் தென்புறச்சுவரிலுள்ள இராசகேசரிவர்மன்கல்வெட்டு:—

மண்ணியாற்றிற்கு வடகரையிலுள்ள காட்டூராகிய அவனி மாணிக்கச்சதுர்வேதிமங்கலத்துக் கோமடத்து இருந்த சர்வகிருத்துயாஜியார் தக்ஷிணாமூர்த்திபட்டர்மகனார் பெரியநம்பி பட்டரும், அவர் மனைவியாரும் இக்கோயிலிறைவராகிய பசுபதி தேவர்க்குக் காலைமாலை இருபொழுதும் ஏற்றி எரிக்க இவ்வூரிலிருந்த

திருவையாற்றுச் சிவலோகன் என்னும் அந்தணனிடம் இரண்டு காசைக் கொடுத்திருந்தார்கள்.

II. மகாமண்டபத்தின் தென்புறச்சுவரிலுள்ள விக்கிரம சோழதேவரின்கல்வெட்டு:—

உத்தமசோழதேவருடைய தாயாகிய செம்பியன்மாதேவியார் இக்கோயில் பசுபதீசுவரர்க்குத் திருநுந்தாவிளக்கு ஒன்றுக்குப் பன்னிருகழஞ்சாக விளக்குமூன்றுக்கு முப்பத்தாறுகழஞ்சுபொன்னை முதலாம் இராசராசமன்னன் அரியணையேறிய பதினொன்றாம் ஆண்டு அதாவது கி. பி. 996ல் திருவிளக்குப்புறமாக அளித்திருந்தனர். இந்நிபந்தத்தை அக்காலம் ஏற்றுநடத்தியவன் ஹாஸியன் விக்கிரமாதித்தன் அச்சஹன ராஜராஜநாடகப் பேரியவன் ஆவன். இந்நிவந்தப்படி இவன் நாள் ஒன்றுக்கு நறுநெய் உழக்காக மூவுழக்குச் செலுத்திவந்தான். இவனுக்குப்பிறகு இவன்குமாரர்களாகிய சிங்கப்பிரியனும், ராஜேந்திரசோழனும் இவ்வுரிமையை அனுபவித்துவந்தார்கள். இவர்களுக்கு ஆண்சந்ததி இன்மையால் இவர்கள் மருமகன் அரையன் உய்யநின்றிடுவானாகிய இராஜசர்ய நிருத்தப்பேரையன் குலோத்துங்கசோழதேவரின் கட்டளைப்படி முப்பது ஆண்டுகள் அனுபவித்துவந்தான். பின் இவன், மேற்சொல்லப்பட்ட ராஜேந்திரசோழனுக்குப்புக்கு அமங்கிலியாயிருந்த வேளாண் துக்கைபக்கல், விக்கிரமசோழதேவரின் ஆறாம்ஆண்டில் அந்த உரிமையை விலைக்குவாங்கிக்கொண்டான்.

III. மகாமண்டபத்தின் தென்புறமுள்ள மூன்றாங்குலோத்துங்கன்கல்வெட்டு.

இம்மன்னன் அரியணையேறிய இருபத்துநாலாவது ஆண்டு நாள் பதினாறில், இறைவர்க்குத் திருவுத்தரீயம், பூணூல் இவைகளின்பொருட்டு எட்டுமாற்றுள்ள ஆறுகழஞ்சுபொன்னை ஆதிச்சப்பிள்ளை என்பவர் கொடுத்துள்ளனர்.

IV. கருப்பஇல்லின் தென்புறமுள்ள மூன்றாங்குலோத்துங்கன்கல்வெட்டு:—

இம்மன்னன் அரியணையேற்றிய 39-ஆம் ஆண்டில் நாள்தோறும் திருமஞ்சனகாலத்திலே திருக்கொள்கைபண்ணிச்சாத்தியருளுவதற்கு வாரணாசிப் பிட்சைமடத்து இராவளன், ஒருபதின்கழஞ்சே முக்காலேயிரண்டு மஞ்சாடியும் நாலுமாப்பொன்னைக் கொடுத்துள்ளான்.

N. B. திருக்கொள்கை என்பது இக்காலம் குவளை என்று வழங்குகிறது.

V. அர்த்தமண்டபத்தின் வடபுறத்திலுள்ள இராசகேசரிவர்மன் திரிபுவனசக்கரவர்த்தி இராஜாதிராஜதேவரின்கல்வெட்டு:-

இம்மன்னன் அரியணையேறிய ஐந்தாம் ஆண்டில் இராமேசுவரமுடையான் சதாசிவதேவனான ராஜராஜசகஸ்ரபாஹு என்பான், பசுபதிதேவர்க்குத் திருவீதியின்பொருட்டு நிலம் வழங்கியுள்ளான். இந்நிலம் இவனது அண்ணனாகிய இராமேசுவரமுடையான் மாதேவனான சோழப்பல்லவவரையனுடையதாகும்.

VI. மகாமண்டபத்தின் வடபுறமுள்ள கல்வெட்டு:—

அரசன்:—பரகேசரிவர்மன் திரிபுவனசக்கரவர்த்தி இராசராசதேவர் கோனேரின்மைகொண்டான். மெய்க்கீர்த்தியின்தொடக்கம்:-

'பூமருவிய பொழிலேழும் பொருப்பேழும் புனைந்தருளி'

இவ்வூர்ப் பசுபதீசுவரர்க்குத் திருவாபரணஞ்செய்யக்கொடுத்து இத்தேவர்பண்டாரத்திலே ஒடுக்கியிருந்த பொன்னிலே சிறிது பொன்னை இக்கோயிற் சிவப்பிராமணர் சிலர் கூறிட்டுக்கொண்ட குற்றத்திற்காக, இச் சிவப்பிராமணரும் இவர்கள் வம்சத்தாரும் இக்கோயிலிலும் இக்கோயிலில் எழுந்தருளுவித்த விக்கிரமசோழீச்சரமுடையார்கோயிலிலும், குலோத்துங்கசோழீச்சரமுடையார் கோயிலிலும் புகுதல் கூடாதென்றும், இவர்கள் கூறிட்டுக்கொண்ட குற்றத்திற்காக நூற்றெண்பதுகாசை இக்கோயில் திருப்பணிக்கு உடலாக ஒடுக்கவேண்டுமென்றும் அரசன் ஆணையிட்டுள்ளான்.

இக்கட்டளை இம்மன்னன் அரியணையேறிய ஆறும் ஆண்டு ஐம்பத்தைந்தாம்நாளில் நிகழ்ந்ததாகும்.

VII கருப்ப இல்லின் வடபுறமுள்ள அச்சுததேவமகாராயர் கல்வெட்டு:—

கொள்ளிட ஆற்றுக்குத் தெற்கு, பழவாற்றுக்கு வடக்கு, திருவாப்பாடிப்பெருவழிக்குக் கிழக்கு, திருமுல்லைவாசலுக்கு மேற்கு இதற்கு உட்பட்ட சீமை ஸ்பையார் வயிரவநயினார்மகனார் க்ஷேத்திர பாலர்க்குக் கணக்குப்பேறாக மாத்தூரில் ஆறுவேலிநிலத்தை இறையிலியாகக்கொடுத்துள்ளனர். இக்கல்வெட்டுச் சகம் 1452ல் அதாவது கி. பி. 1530ல் பொறிக்கப்பெற்றதாகும்.

VIII. இரண்டாம்கோபுரவாயிலின் வடக்குப்பக்கத்திலுள்ள நரசிங்கதேவமகாராயர்மகனார் அச்சுதமகாராயர்கல்வெட்டு:—

வழுதுளம்பட்டிச்சாவடிக்கு அருகிலுள்ள ஒரு ஊரைக் கோயிலுக்குக் கொடுத்ததாகப் புலப்படுகின்றது.

N. B.:—இக்கல்வெட்டுப் பெரும்பான்மையும் சிதைந்துவிட்டது. இச்செய்தியை அறிவதற்கு ஆண்டு அறிக்கை பெரிதும் பயன்பட்டது.

IX. காலிங்கன் எல்லனைப்பற்றிய கல்வெட்டு:—

இது முதற்கோபுரவாயிலின் வடக்குப்பக்கத்தில் இருக்கிறது. இதில் நான்குசெய்யுட்கள் அடங்கியுள்ளன. இவையனைத்தும் காலிங்கன் எல்லனது புகழைப்பற்றிக்கூறுகின்றன. இவன் தமிழில் மிக்க அன்புடையவன் என்றும், கொடையில் பாரியினும் மேம்பட்டவன் என்றும் பலவாறாகப் பேசப்படுகின்றான். இக்கல்வெட்டுக்களின் எழுத்துக்களை நோக்கின் இவன் பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்தவனாதல்வேண்டும்.

N. B:—இச்செய்யுட்கள் இதுகாறும் தென்னிந்தியக் கல்வெட்டுத்தொகுதிகளில் வெளிவந்தில. விரிவஞ்சி இவற்றுள் ஒன்றை ஈண்டுக் குறிப்பிடுகின்றேன்.

வரி. (1) நாலங்க வாளிபெற்றார் நாரியரே பாரியிலு
மேலங்க மான கொடைவேளான்—காலிங்க
(5) னெல்லனுக் கேபெறுமோ விந்திரநீ லங்கருப்பு
(8) வில்லன்கைக் கேபெறுமோ மின்.

X. ஆதிகேசவப்பெருமாள்கோயிலிலுள்ள கல்வெட்டு:—

"உடையார் பசுபதீசுவரமுடையநாயனார்க்கும் ஆதிகேசவப் பெருமாளுக்கும் மகாபூசை திருப்பணி திருத்திங்கள் திவதம் திருநாள் திருத்தேர் ஒன்றில் ஒன்று குறைச்சல் அற நடத்தும்படியும் இந்தத் தினத்திலே கல்வெட்டி நாட்டிக்கொள்ளும்படியும் சர்வ மானியமாக அநுபவித்துக்கொண்டுவரவும்" என்ற பகுதியால் இக்கோயிலுக்கு நிபந்தம் அளித்திருந்தசெய்தி அறியக்கிடக்கின்றது. இவ்வாறு நிபந்தம் அளித்தவர் காஞ்சீபுரம் கோனேரிதேவ மகாராசர் ஆவர். [இம்மன்னன்பெயரை அறிதற்குக் கல்வெட்டுத் துறையாளரின் ஆண்டு அறிக்கை பயன்பட்டது. இக்காலம் இக் கல்வெட்டுப் பெரும்பான்மையும் சிதைந்துவிட்டது.]

வரலாற்றுப்பகுதி. கோயில் நிலைபெற்றுள்ள இடம்:—

முதலாம் இராசராசன்கல்வெட்டு இக்கோயிலில் ஒன்றுதான் உள்ளது. இதில் இவ்வூர் பந்தணைநல்லூர் என்றே குறிப்பிடப் பெற்றிருக்கிறது. இது இம்மன்னனது 10-ஆம் ஆண்டில் பொறிக்கப்பெற்றதாகும். விக்கிரமசோழனது 9-ஆம் ஆண்டுக் கல்வெட்டில் இவ்வூர் வடகரை விருதராசபயங்கரவளநாட்டு விளத்தூர்நாட்டுப் பந்தணைநல்லூர் என்று கூறப்படுகிறது.

எனவே சுந்தரமூர்த்திநாயனாரால் நாட்டுத்தொகையிற் குறிப் பிடப்பெற்ற விளத்தூர்நாட்டு விளத்தூர் என்பது இப்பந்தணை நல்லூர்க்குப் பக்கத்தே இருத்தல்வேண்டுமென்று உய்த்துணரக் கிடக்கின்றது.

இராசராசநாடகம்:—

முதலாம் இராசராசன்காலத்தில் இக்கோயிலில் நட்டுவப்பங்கு, மெய்மட்டிப்பங்கு இவைகளை உடையவனாயிருந்தவன் ராஜராஜ நாடகப்பெரியன் என்று பாராட்டப்படுகின்றான். இப்பட்டம் ராஜ ராஜநாடகத்தில் இவனுக்கு இருந்த பெரும்புலமையை விளக்குவ

தாகும். இதுபொழுது இந்நூல் கிடைத்திலது. இந்நூலைப் பற்றித் திருப்பூந்துருத்திக் கல்வெட்டொன்றிலும் குறிக்கப்பெற்றுள்ளது.

### எழுந்தருளுவிக்கப்பெற்ற படிமங்கள்:—

பரகேசரிவர்மன் திரிபுவனசக்கரவர்த்திகள் இராஜராஜதேவர் கோனேரின்மைகொண்டான்காலத்துக் கல்வெட்டில் விக்கிரமசோழீச்சரமுடையாரையும், குலோத்துங்கசோழீச்சரமுடையாரையும் எழுந்தருளுவிக்கப்பெற்ற செய்திகள் கூறப்பெற்றுள்ளன.

இவ்விருதேவர்களும் இக்காலம் முதற்பிராகாரத்துக் கொன்றைமரத்தடியிலும், இரண்டாம்பிராகாரத்தில் இரண்டாம் கோபுரத்துத் தென்பாலுள்ள செங்கற்கோயிலிலும் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகளாக இருக்கவேண்டும்.

### கோயில்நிலத்தைக் கங்காணம் செய்தவர்கள்:—

"வீரசோழ அணுக்கரும், கைக்கோளரும், வேளான் இஞ்சி உடையானும் இத்தேவர் தேவதானத்திலும்" என்னும் கல்வெட்டுப்பகுதியால் இவ்வூரில் வேளாளர்குடியினர் ஒருவர் அரண் வகுத்துகொண்டு சீரும் சிறப்புமாக வாழ்ந்திருந்த செய்தி பெறப்படுகின்றது. ஈண்டுக் குறிக்கப்பெற்ற இம்மூவரும் கோயில்நிலங்களைக் கண்காணித்துவந்தவர்கள் ஆவர். இவர்களுடைய கண்காணிப்புச் செவ்விதின் இல்லாமையால் குடிமக்களிடம் மாற்றப்பட்டுள்ளது. இச்செய்தி இரண்டாம் இராசராசசோழன்கல்வெட்டிற் காணப்படுகின்றது.

### கல்வெட்டுக்களைப் பாதுகாத்துவந்தவிதம்:—

பழங்கல்வெட்டிற் கண்டபடி என்று முதலில் எழுதப்பெற்று, அதன்கீழ் "ஸ்வஸ்திஸ்ரீ கோராஜகேஸரிவந்மற்கு யாண்டு ௰ பந்தணைநல்லூர்ப் பசுபதிதேவற்கு" என்று இக்கோயில் அர்த்தமண்டபத்தின் தென்புறத்திலுள்ள ஒரு கல்வெட்டுத் தொடங்குகிறது. இதனாற் கோயிலைப் புதுப்பிக்குங்கால் அங்குக் கல்வெட்டு இருந்தால் அதை அப்படியே புதுப்பித்தகோயிலிற் செதுக்கிவைப்பது பண்டையவழக்கம் என்று அறியக்கிடக்கின்றது.

ஸ்ரீ:

# பத்திராசிரியர்குறிப்பு

நிகழும் சருவசித்து ஐப்பசித்திங்களுடன் நம் செந்தமிழ் நாற்பத்துநான்காம்ஆண்டு நிறைவுற்றுவிளங்குகிறது. இதன் சென்ற ஆண்டு நிகழ்ச்சியை இங்கே சுருக்கித் தருகிறோம்.

தமிழ்வளர்ச்சியே குறிக்கொண்டெழுந்த இது தோன்றியது முதற் பல அரிய தமிழ்நூல் வெளியீடுகளாலும் பல திறத்தனவான எண்ணிறந்த உயர்ந்த ஆராய்ச்சிக்கட்டுரைகளாலும் தலைசிறந்த தமிழ்ப்பணியாற்றிவருதல் உலகம் அறிந்தது.

சென்ற பல ஆண்டுகளாக, உலகமுழுவதையும் ஒருங்கலைத்த பெரும்போரின் விளைவால் பத்திரிகைக்குவேண்டிய காகித முதலியவை போதியஅளவு கிடையாமையால் செந்தமிழ் பக்க அளவிற் சுருங்கி வெளிவரலாயிற்று. உலகப்பெரும்போர் ஒருவாறு நின்றதெனினும் அதன் விளைவாகிய தீங்குகள் முழுதும் நீங்காத நிலையிற் பல முட்டுப்பாடுகளுக்கிடையே ஒருவாறு வெளிவந்து கொண்டிருந்த செந்தமிழ், சென்ற சில மாதங்களில், தன்னை அரிய பெரிய பொருளுரைகளாற் சிறப்பித்துவந்த தன் ஆசிரியப்பெருந் தகையாம் திரு. நாராயணையங்கார்சுவாமியையும், சுவாமிவிபுலாநந்தர், சுவாமிஞானப்பிரகாசர் முதலான புலவர்பெருமக்களையும் இழந்து பெரிதும் அவலமுற்றது. ஆயினும் மகிழ்தற்குரிய சில நிகழ்ச்சிகளும் உளவாயின. அவற்றுள், தலையாயது நம்நாடு தன்னரசுபெற்ற செய்தியாகும்.

தன்னரசுபெற்ற சென்னையரசாங்கத்தின் ஆதரவில் கல்வியமைச்சர் நன்முயற்சியால் தமிழ் வளர்ச்சியடைதற்குரிய சில நற்குறிகள்கண்டு மகிழ்ச்சியடைகிறோம். அம்முயற்சியால் தமிழ் பல துறையிலும் ஆக்கம்பெற்று விரைவில் உலகமொழிகளுள் முதன்மைபெற்றவற்றோடு ஒருங்கெண்ணத்தக்க நிலைமையெய்தும் என்று நம்புகிறோம். இது நிற்க.

சென்ற ஆண்டு உயர்ந்த பொருளுரை வழங்கிச் செந்தமிழைச் சிறப்பித்த அறிஞர்களுக்கெல்லாம் எமது மனமார்ந்த நன்றியறிவைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆசிரியர் மாற்றத்தாலும் வேறு பல இடையூறுகளாலும் செந்தமிழ் காலந்தாழ்த்துவருவதுகுறித்து வருந்துகிறோம். பொறுத்தருளுமாறு சந்தாநேயர்களையும் பிறரையும் வேண்டிக்கொள்கிறோம்.

செந்தமிழ் இனிப் பழைய உருவொடு உரியகாலத்து வெளிவரற்காவனசெய்யப்பட்டுள்ளன. இதுவரை செந்தமிழில் அநுபந்தமாக வெளியிடப்பட்டுவந்த நூல்கள் விரைந்து முற்றுவிக்கப் பெறும். மேலும் அநுபந்தமாகத் தொடர்ந்து வெளியிடும்படி இதுவரை அச்சில்வராத சில நூல்கள் ஆராய்ந்து செப்பஞ்செய்து வைக்கப்பட்டுள்ளன. பேரறிஞர் பல்லோர் சீரியகட்டுரைகளுதவிவர இசைந்திருக்கிறார்கள்.

ஆதலால், சந்தாநேயர்கள் மேலும் தொடர்ந்து செந்தமிழை யாதரித்துவருவதுடன் தங்கள் நண்பர்களையும் செந்தமிழ்க்குச் சந்தாநேயராகத்தூண்டுமாறும், நல்லறிஞரனைவரும் தங்கள் அரும் பெறற்கட்டுரைகளாற் செந்தமிழை அலங்கரித்துவருமாறும், தமிழ் மக்களனைவரும் தங்கள் அன்பொடுகலந்த ஆசிவழங்கி எமக்கு ஊக்கமளிக்குமாறும் வேண்டுகிறோம்.

---

## மதிப்புரை

---

[மதுரைச்சோக்கநாதர் வருக்கக்கோவை (குறிப்புரையுடன்):- இயற்றியவர் மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலையாசிரியர் உயர்திரு. சு. நல்லசிவன்பிள்ளையவர்கள்; பதிப்பாசிரியர் தருமபுரஆதீனத்துக் கீழ்த்திசைப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப்போசிரியர் வித்துவான் திரு. பு. சி. புன்னைவனநாதமுதலியாரவர்கள், விலை அணு 8. இயற்றியவர் அல்லது பதிப்பாசிரியரிடம் பெறலாம்.]

வருக்கக்கோவையென்பது தமிழெழுத்துக்களுள் உயிரும் உயிர்மெய்யுமாய் மொழிக்குமுன் வரும் எழுத்துக்கள் முதலில் முறையே அமைய அகப்பொருள்பற்றிய களவு கற்பென்னும் இருவகைக் கைகோளிலும் நிகழும் கிளவிகளுள் ஏற்றவை முறையே தொடர்புற அமைந்து முற்றிநிற்க இயற்றப்படும் ஒரு பிரபந்தமாகும். அம்முறையமைந்த மதுரைச்சொக்கநாதர் வருக்கக்கோவையென்னும் இதனுள் ஆசிரியரது கவித்துவமும் கற்பனையும் முதலியவை சிறந்த முறையில் அமைந்து தமிழாராய்ச்சித்துறைவல்ல புலவர்பலராலும் பாராட்டப்பட்டுவிளங்குகின்றன. உயர்ந்தநூல்களை இயற்றும் புலவர்களும் இயற்றுவிக்கும் பெருமக்களும் இக்காலத்தும் உள்ளனரென்று தெளியும்படி இதனையாக்குவித்து அச்சிட்டு வெளியிடுவித்த பனைசையாதீனகர்த்தர்திறத்துத் தமிழுலகம் மிக்க கடப்பாடுடைத்து.

---

குறுந்தொகைவிளக்கம்:—குறுந்தொகையென்பது பழைய தமிழ்நூல் வகையில் எட்டுத்தொகைநூல்களுள் ஒன்று. அஃது அடியளவாற் குறுகிய செய்யுள்களையுடைமையின் அப்பெயர்த்தாயிற்று. அதன்கண் அமைந்த செய்யுட்கள் நானூறுகும். அவற்றுள் 380 செய்யுட்களுக்குச் சீராலுயர்ந்த பேராசிரியர் உரைகண்டனரென்றும், எஞ்சிய இருபதுசெய்யுட்களுக்கும் உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியர் உரைகண்டனரென்றும் கூறுப. அவ்வுரைகள் அகப்பட்டில.

அந்நூலை முதன்முறையாகத் திருக்கண்ணபுரத்தலத்துச் சௌரிப்பெருமாளரங்கனார் தமக்குக்கிடைத்த ஓலைச்சுவடிகளிற்கண்ட மூலத்துடனும் தாம் நூதனமாக வரைந்த உரையுடனும் அச்சிட்டு வெளியிட்டனர்.

அதன்பின், பண்டைத்தண்டமிழ்நூல்கள் பலவற்றையும் நன்காராய்ந்து பலப்பல ஆராய்ச்சிக்குறிப்புக்களுடன் உயர்ந்தமுறையில் அச்சிட்டுதவிய பேராசிரியர் டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் தமக்குக்கிடைத்த ஓலைச்சுவடிகளைவைத்து ஒப்புநோக்கித் திருத்திய குறுந்தொகைமூலத்துடன் தாம் புதிதாக வரைந்த விரிவுரையையும் அச்சிட்டு வெளியிட்டருளினார்கள். இப்பதிப்பால் முந்திய சௌரிப்பெருமாளரங்கனார்பதிப்பில் மூலமும் உரையும் திருந்திய இடங்கள் மிகப்பல. இது நிற்க.

இப்பொழுது வெளிவந்துள்ள குறுந்தொகைவிளக்கம் என்பது ஸேது ஸமஸ்தான மஹாவித்வானும், இச்செந்தமிழ்ப்பத்திரிகையின் முதலாசிரியரும், அண்ணாமலைபல்கலைக்கழகத்துத் தமிழாராயும் குழுவினருள் ஒருவரும் ஆகி விளங்கிச் சில ஆண்டுகட்குமுன் காலஞ்சென்ற பாஷாகவிசேகரர் ரா. இராகவையங்காரவர்கள் தம் மதிநுட்பத்தானும் ஆராய்ச்சித்திறத்தானும் இந்நூலின் பெருமையெல்லாம் இனிது புலனாக வரைந்த விளக்கவுரையின் ஒருபகுதியாகும். இதனுள் குறுந்தொகையின் முதல் 112 பாடல்களும் அவற்றுக்கு உரையும் காணப்படுகின்றன. அவற்றுள் முந்திய பதிப்புக்களிலுள்ள மூலத்தினும் உரையினும் சிறக்குமாறு ஆசிரியர் ஆங்காங்குத் திருத்திய திருத்தங்களும், வரைந்த பொருள்களும், ஆசிரியர் தாம்கண்ட பொருளுக்கிசைய எடுத்துக்காட்டும் மேற்கோள்களும் படிப்போர்க்கு உவகையும் வியப்பும் ஒருங்குவிளைப்பனவாயுள்ளன. குறுந்தொகைவிளக்கத்தின் இம் முதற்பகுதி வெளிவருமுன் அதனை வரைந்துதவிய ஆசிரியர் காலஞ்சென்றது இரங்கற்குரியது.

இப்பகுதியை நன்கு அச்சிட்டு வெளியிடுவித்த அண்ணாமலைபல்கலைக் கழகம் இந்நூலின் எஞ்சிய பாடல்களுக்கும் மஹாவித்வான் ஐயங்காரவர்கள் எழுதிய விளக்கத்தைப் பெற்று அச்சிட்டுதவியும், ஏனை அருந்தமிழ்நூல்களுக்கும் இன்னோரன்ன விளக்கவுரைகளைத் தக்க பெரும்புலவர்களால் எழுதி வெளியிடுவித்தும் தமிழ்ப்பணியில் மேலும் மேலும் சிறந்து நீடுநிலவுக.

இக் குறுந்தொகைவிளக்கப்பதிப்புக்கு உயர்திருவாளர் டாக்டர் அ. சிதம்பரநாதச்செட்டியாரவர்கள் விரிந்த முகவுரையொன்று எழுதியுள்ளார்கள். அதனுள் இவ்விளக்கவுரையின் நயங்கள் பலவும் நன்கு விரித்து விளக்கப்பட்டிருப்பினும், இந்நூலின் 24-ஆம் செய்யுளில் முறையே 'களிறு', 'துளிறு' என முன்னைப்பதிப்பாசிரியர்கள்கொண்டபாடத்தை இவ்விளக்கவுரையாசிரியர் தக்க காரணங்காட்டிக் 'துளிர்' என்று திருத்திக்கொண்டு வரைந்த சிறந்த உரையை மறுத்துத் தம் ஊகமொன்றேதுணைகொண்டு, முதற்பதிப்பாளர்கொண்ட களிறு என்ற பாடமே சிறந்ததென்று துணிந்து, முதற்பதிப்பாசிரியர் உரையாததனை அச்செய்யுளுக்கு அவருரைத்த சிறந்த பொருளாக மயங்கியெழுதியவைபோல்வனவும் உள. அவை முகவுரையின் கண் இடம்பெறத்தக்கனவல்ல.

இக் குறுந்தொகைவிளக்கம் வேண்டுவோர், அண்ணாமலைபல்கலைக் கழகத்துக்கு எழுதி விலை முதலிய விவரம் தெரிந்து கொள்க.

---

## II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) ... ... | 0 | 4 | 0 |
| 2. | கணுநால் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ... | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) ... | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... ... ... | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை... ... ... | 0 | 8 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 32. | மநீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது .. ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... .. ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100)... | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (தமிழ்) ... ... ... | 0 | 6 | 0 |
| | ஷை (ஆங்கிலம்) ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு ... ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில் அந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... ... ... | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ... | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 65. | மத்யமவியாயோகம் ... ... ... | 0 | 2 | 0 |
| 67. | அமிர்தரஞ்ஜனி ... ... ... | 0 | 2 | 0 |
| 68. | திருமுருகாற்றுப்படை ... ... ... | 0 | 10 | 0 |

**குறிப்பு:**-ஸ்டாக்கிலில்லாத சங்கப்பிரசுரங்களும் செந்தமிழ்ப்பிரசுரங்களும் இதில் குறிக்கப்படவில்லை. மறுபடி அச்சிட்டு வெளியானதும் இப்பட்டியலில் சேர்க்கப்படும்.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷசந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷசந்தா ரூ 4—8—0. இதுவரை 44 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 5—0—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. புத்தகவியாபாரிகள் வாங்கும் சங்கப்பிரசுரங்களுக்குச் சர்க்கார் உத்திரவுப்படி 100-க்கு 15 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணன், மானேஜர்.